# இன்றைய இறைவார்த்தை

# 13-03-2015

**தவக்காலம் 3ஆம் வாரம் – வெள்ளி**

**முதல் வாசகம்:**

எங்கள் கைவினைப் பொருள்களை நோக்கி,
“எங்கள் கடவுளே” என்று இனி சொல்ல மாட்டோம்.

**இறைவாக்கினர் ஓசேயா நூலிலிருந்து வாசகம். 14 : 1 – 9**

ஆண்டவர் கூறியது: “இஸ்ரயேலே! உன் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வா. நீ உன் தீச்செயலால் வீழ்ச்சியுற்றாய். இம்மொழிகளை ஏந்தி ஆண்டவரிடம் திரும்பி வந்து இவ்வாறு சொல்லுங்கள்: “தீவினை அனைத்தையும் அகற்றியருளும், நன்மையானதை ஏற்றுக்கொள்ளும். நாங்கள் எங்கள் வாய்மொழியாம் கனிகளை உமக்கு அளிப்போம். அசீரியர் எங்களை விடுவிக்கமாட்டார்கள். குதிரைமேல் நாங்கள் ஏறமாட்டோம். எங்கள் கைவினைப் பொருள்களை நோக்கி, “எங்கள் கடவுளே!” என்று இனிச் சொல்லமாட்டோம். திக்கற்றவன் உம்மிடத்தில் பரிவைப் பெறுகிறான்” எனச் சொல்லுங்கள்.

அவர்களுடைய பற்றுறுதியின்மையை நான் குணமாக்குவேன். அவர்கள் மேல் உளமார அன்பு கூர்வேன். அவர்கள் மேலிருந்த என் சினம் தணிந்துவிட்டது. நான் இஸ்ரயேலுக்குப் பனி போலிருப்பேன். அவன் லீலிபோல் மலருவான். லெபனோனின் மரம்போல் வேரூன்றி நிற்பான். அவனுடைய கிளைகள் விரிந்து பரவும். அவன் பொலிவு ஒலிவ மரம் போல் இருக்கும். லெபனோனைப் போல் அவன் நறுமணம் பரப்புவான். அவர்கள் திரும்பிவந்து என் நிழலில் குடியிருப்பார்கள். கோதுமை போல் தழைத்தோங்குவார்கள். திராட்சைக் கொடி போல் செழிப்படைவார்கள். லெபனோனின் திராட்சை இரசம் போல் அவர்களது புகழ் விளங்கும். இனிமேல் எப்ராயிமுக்குச் சிலைகள் எதற்கு? நானே அவனுக்குச் செவிசாய்த்து, அவன் மேல் அக்கறை கொண்டுள்ளேன். நான் பசுமையான தேவதாரு மரம் போன்றவன். உன் கனி எல்லாம் என்னிடமிருந்தே வரும். ஞானம் நிறைந்தவன் எவனோ, அவன் இவற்றை உணர்ந்து கொள்ளட்டும். பகுத்தறிவு உள்ளவன் எவனோ, அவன் இவற்றை அறிந்து கொள்ளட்டும். ஆண்டவரின் நெறிகள் நேர்மையானவை. நேர்மையானவர்கள் அவற்றைப் பின்பற்றி நடக்கிறார்கள். மீறுகிறவர்கள் அவற்றில் இடறி விழுகின்றார்கள்.”

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா! உமக்கு நன்றி.

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்கள்: 81 : 5c – 7a, 7bc – 8, 9 – 10ab, 13, 16 (பல்லவி 10, 8a)**

**பல்லவி: உன் கடவுளாகிய ஆண்டவர் நானே. என் மக்களே, எனக்குச் செவி கொடுங்கள்.**

1. நான் அறியாத மொழியைக் கேட்டேன். தோளினின்று உன் சுமையை அகற்றினேன். உன் கைகள் கூடையினின்று விடுதலை பெற்றன. துன்ப வேளையில் என்னை நோக்கி மன்றாடினீர்கள். நான் உங்களை விடுவித்தேன். பல்லவி
2. இடி முழங்கும் மறைவிடத்தினின்று நான் உங்களுக்கு மறுமொழி கூறினேன். மெரிபாவின் நீரூற்று அருகில் உங்களைச் சோதித்தேன். என் மக்களே, எனக்குச் செவிகொடுங்கள். நான் உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றேன். இஸ்ரயேலரே, நீங்கள் எனக்குச் செவிசாய்த்தால், எவ்வளவு நலமாயிருக்கும்! பல்லவி
3. உங்களிடையே வேற்றுத் தெய்வம் இருத்தலாகாது. நீங்கள் அன்னிய தெய்வத்தைத் தொழலாகாது. உங்களை எகிப்து நாட்டினின்று அழைத்து வந்த கடவுளாகிய ஆண்டவர் நானே. பல்லவி
4. என் மக்கள் எனக்குச் செவிசாய்த்திருந்தால், இஸ்ரயேலர் நான் காட்டிய வழியில் நடந்திருந்தால், எவ்வளவோ நலமாயிருந்திருக்கும். உங்களுக்கு நயமான கோதுமையை உணவாகக் கொடுப்பேன். உங்களுக்கு மலைத் தேனால் நிறைவளிப்பேன். பல்லவி

**நற்செய்திக்கு முன் வசனம்:** மத்தேயு **4 : 17**

மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது, என்கிறார் ஆண்டவர்.

**நற்செய்தி வாசகம்:**

நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர். அவரிடம் அன்பு கூர்வாயாக.

**தூய மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 12 : 28 – 34**

அக்காலத்தில் மறைநூல் அறிஞருள் ஒருவர், இயேசுவை அணுகி வந்து, "அனைத்திலும் முதன்மையான கட்டளை எது?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "இஸ்ரயேலே கேள். நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும், முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்புகூர்வாயாக என்பது முதன்மையான கட்டளை. உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூர்வாயாக என்பது இரண்டாவது கட்டளை. இவற்றைவிட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை" என்றார்.

அதற்கு மறைநூல் அறிஞர் அவரிடம், ‘‘நன்று போதகரே, ‘‘கடவுள் ஒருவரே. அவரைத் தவிர வேறு ஒரு கடவுள் இல்லை’’ என்று நீர் கூறியது உண்மையே. அவரிடம் முழு இதயத்தோடும், முழு அறிவோடும், முழு ஆற்றலோடும், அன்பு செலுத்துவதும், தன்னிடம் அன்பு கொள்வதுபோல அடுத்திருப்பவரிடம் அன்பு செலுத்துவதும் எரிபலிகளையும் வேறு பலிகளையும்விட மேலானது’’ என்று கூறினார். அவர் அறிவுத்திறனோடு பதிலளித்ததைக் கண்ட இயேசு அவரிடம் ‘‘நீர் இறையாட்சியினின்று தொலையில் இல்லை’’ என்றார். அதன்பின் எவரும் அவரிடம் எதையும் கேட்கத் துணியவில்லை.

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.

**சிந்தனைக்கு:**

அறிவுத் தெளிவோடு பதில் அளித்ததை கண்டு, மிக அருகாமையில் இருக்கின்றாய் என்றார். மனிதர் எப்பொழுது அறிவுத் தெளிவோடு பதில் அளிக்க முடியும்? சட்டங்களையும், திட்டங்களையும் அறிந்து செயல்படும் போது மட்டுமே. அப்படியென்றால் இவர்கள் வாழ்வுக்கு மிக அருகாமையில் இருக்கிறார்கள் என்பது தானே அர்த்தம். இதனையே இயேசுவும் உறுதிப்படுத்துகின்றார்.

**********